இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 18.07.2026

# போலீஸ் ராஜ்யம் நடத்தும் விஜய்!

முதலமைச்சர் விஜய் கையில் லத்தி இல்லையே தவிர,போலீஸ் ஆட்சியைத்தான் அவர் நடத்தி வருகிறார். எதிர்க் கருத்துச் சொல்கிறவர்கள் அனைவரையும் வழக்குப் பதிவு செய்து கைது செய்து சிறையில் அடைப்பதில் குறியாக இருக்கிறது குதிரை பேர அரசு.

100 கோடி ரூபாய் மதிப்பிலான பழனி கோவில் சொத்தை, 2 கோடிக்கு தனியாருக்குத் தாரை வார்த்து விட்டு, மாட்டிக் கொண்டதும் பேய்முழி முழிக்கிறார் அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ். அதுகுறித்து சமூக வலைதளத்தில் விமர்சனம் செய்கிறவர்களை, 'வழக்குப் போட்டுவிடுவேன்' என்றும் மிரட்டுகிறார்.

**பழனி கோயில் நிலத்தை மோசடியாக விற்ற விவகாரத்தில் அமைச்சர் ரமேஷ் மீது சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பினார் என்று வினோத் சூர்யா குமார் என்பவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட வினோத் சூர்யா குமார் மீது பொது அமைதியைக் குலைப்பது, கலவரத்தைத் தூண்டும் வகையில் செயல்படுவது என விஜய் அரசு வழக்குப்பதிவு செய்துள்ளது. சாதாரணமாக ஒரு விமர்சனத்தை அமைச்சர் மீது வைத்ததற்காக அவதூறு வழக்கு எனப் பதிவு செய்யாமல் கலவரத்தைத் தூண்டுவதாக வழக்குப் போடுகிறார்கள். இதனைத் தான் போலீஸ் ராஜ்யம் என்கிறோம்.**

தன் மீதான வழக்கை ரத்து செய்யக்கோரி வினோத் சூர்யா குமார் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி, "சமூக வலைதளப் பதிவுக்கு அவதூறு வழக்குதானே தொடர முடியும்?" என்று மிகச் சரியான கேள்வியை எழுப்பினார்.

'தவறான பிரிவில் வழக்குப்பதிவு செய்வதைத் தவிர்க்குமாறு அரசுக்கு அறிவுறுத்துங்கள்' என்று அரசு குற்றவியல் வழக்கறிஞரிடம் நீதிபதி அறிவுறுத்தினார். வழக்கு தொடர்பாக காவல்துறை பதிலளிக்குமாறு உத்தரவிட்ட நீதிமன்றம், வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 5 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தது. தன் மீதான விமர்சனங்களைத் தாங்க முடியாமல் இதுபோல மிரட்டுவதை வழக்கமாக வைத்துள்ளது விஜய் அரசு.

விஜய் அரசின் போலீஸ் ராஜ்யத்துக்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்ல முடியும்.

- ★ யூடியூப்பில் விஜய் அரசு மீது கடுமையான விமர்சனங்களை வைத்தார் என்று ஜூன் 8 ஆம் தேதியன்று மதுரையில் மாரிதாஸ் கைது செய்யப்பட்டார். நீதிமன்றம் அவரை சொந்த ஜாமீனில் விடுவித்தது.
- ★ கிருஷ்ணகிரி மாவட்டம் - ராயக்கோட்டை அருகே உள்ள போடம்பட்டி கிராமத்தில் வசிப்பவர் அன்பானந்தம் (28). தி.மு.க.வின் ஜென்-சி ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினராக உள்ளார். இவர் தமிழக முதல்வர் விஜய், நடிகை த்ரிஷாவுடன் பிறந்தநாள் கொண்டாடியது குறித்து விமர்சனம் செய்து வீடியோ ஒன்றைப் பதிவிட்டு இருந்தார். உடனே இவரைத் தேடி போலீஸ் வந்துவிட்டது.

இதை அறிந்த அன்பானந்தம் தேன்கனிக்கோட்டை நீதிமன்ற நீதிபதி தினேஷ்குமார் முன்னிலையில் சரணடைந்தார். அவரை விசாரிக்க நீதிபதி அனுமதித்தார். ஒரு நாள் போலீஸ் விசாரணையில் இருந்த அன்பானந்தத்தை நீதிபதியே நிபந்தனை ஜாமீனில் விடுவித்துவிட்டார்.

- ★ முன்னாள் அமைச்சர், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணனை படுத்திய பாடு நாடறியும். முதலமைச்சர் விஜய் பற்றி அவதூறாகப் பேசியதாக ஆத்தூர் காவல்துறையினரால் தூத்துக்குடி மாவட்டம் - ஆத்தூரில் கைது செய்யப்பட்டார் முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன். கைது செய்யப்பட்ட அன்றே அவருக்கு நீதிமன்றம் ஜாமீன் வழங்கியது.
- ★ **'பவுடர்' அடித்து மாட்டிக் கொண்டார் அமைச்சர் சரத்குமார். அந்த வீடியோவை வெளியிட்டார் என்று தாம்பரத்தைச் சேர்ந்த சரண் ஜெயராமன் தேடப்பட்டார். தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது என்று பேட்டியே கொடுத்தார் சரண் ஜெயராமன். அவரை வேறு ஒரு வழக்கில் திடீரென கொளத்தூர் போலீஸார் கைது செய்தார்கள்.**

**வழக்கை விசாரித்த சென்னை எழும்பூர் நீதிமன்ற நடுவர், போலீசார் சட்டப்படியான சரியான நடைமுறைகளைப் (legal process) பின்பற்றாமல் இந்தக் கைதை மேற்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டினார். காவல்துறை தரப்பின் ரிமாண்ட் (Remand) கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிமன்றம், சரண் ஜெயராமனின் கைதை உடனடியாக ரத்து செய்து (Cancel) அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டது. எந்தளவுக்கு பழிவாங்கும் நோக்கத்தோடு கைது நடவடிக்கைகள் விஜய் அரசால் செய்யப்படுகின்றன என்பதற்கு இது ஒரு உதாரணம் ஆகும்.**

- ★ 'புதிய தலைமுறை' தொலைக்காட்சியில் விவாதங்கள் நடத்தும் ஊடகவியலாளர் விஜயனை, விசாரணை என்ற பெயரால் மிரட்டி அனுப்பி இருக்கிறார்கள். குதிரை பேரத்தால் உருவான விஜய் ஆட்சி, மற்றவர்கள் மீது குதிரை பேர குற்றச்சாட்டை வைத்து திசை திருப்பி வருகிறது. இதில் சம்பந்தப்பட்ட ஒருவர், ஊடகவியலாளர் விஜயனிடம் பேசியதாகச்சொல்லி, அவரை திருவல்லிக்கேணி காவல் துறை விசாரணைக்கு அழைத்து மிரட்டி உள்ளனர்.

சென்னை பத்திரிக்கையாளர் மன்றப் பொதுச்செயலாளர் அசீப் இது குறித்து அளித்துள்ள பேட்டியில், "விஜயனை இரவு 10 - 12 மணி வரையும் விசாரணை செய்துள்ளார்கள். அவர் வீட்டிற்குச் சென்றவுடன் மீண்டும் 2 மணிக்கு வரச் சொல்லி விசாரணை செய்துள்ளனர். மீண்டும் காலை 11 மணிக்கு வர வைத்து 11 - 5 மணி வரை விசாரணை என்று அலைக்கழித்துள்ளனர். அப்போது அவரிடம் இருந்து மொபைல் போனையும் பறிமுதல் செய்துள்ளனர். இந்த விசாரணையில், 'யார் பெயரையாவது சொல்லுங்கள்' என்று தொடர்ந்து கேட்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை. அடிப்படை உரிமைக்கும், கருத்துரிமைக்கும் எதிரான செயல்" என அவர் சொல்லி இருக்கிறார்.

**குற்றங்கள் அதிகமாகி விட்டன. த.வெ.க. நிர்வாகிகள் செய்யும் குற்றச் செயல்களும் அதிகமாகி விட்டன. ஊழல்கள் தொடங்கி விட்டன. ஒவ்வொரு அமைச்சராக அம்பலப்பட்டு வருகிறார்கள். இவை அனைத்தையும் மறைக்கவே போலீஸ் பாணியை கையில் எடுத்து அராஜக ஆட்சியை நடத்தி வருகிறார் முதலமைச்சர் விஜய்.**

●●

### கடந்த 2 மாதமாக சம்பளம் வழங்கப்படவில்லை:

# Childline (1098) அமைப்பின் பணியாளர்களின் பிரச்சினையைத் தீர்த்து - அவர்களது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க அரசு முன்வர வேண்டும்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜூலை 18–**

Childline (1098) **அமைப்பில் பணிபுரியும் பணியாளர்களுக்கு கடந்த 2 மாதமாக சம்பளம் வழங்கப்படவில்லை. எனவே அவர்களின் பிரச்சினையைத் தீர்த்து அவர்களது வாழ்வாதாரத்தை பாதுகாக்க அரசு முன்வர வேண்டும் என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தமது சமூக வலைதளப்பதிவில் வலியுறுத்தியுள்ளார்.**



இது குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:

குழந்தைகள் நலனுக்கான #Childline (1098) அமைப்பின் பணியாளர்களுக்கு கடந்த இரண்டு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துள்ளது.

ஊதியம் இல்லாத நிலையில் Childline பணியாளர்கள் சிலர் தங்கள் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க இரவு நேரங்களில் மாற்று வேலைகளுக்கு செல்லக்கூடிய அவலம் ஏற்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்.

இன்னும் சிலர் இந்தப் பணியே வேண்டாம் என விலகும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

குழந்தைகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்யும் Childline அமைப்பு எவ்வளவு முக்கியமோ, அதே அளவு அதில் பணிபுரிவோரின் நலனும் முக்கியம்.

எனவே Childline பணியாளர்களின் ஊதியப் பிரச்சினையைத் தீர்த்து வைத்து, அவர்களது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டு ள்ளார்.

### அடுத்த ஆறுமாதங்களில் நில அளவை – மண் பரிசோதனைப் பணிகளை முடிக்க இலக்கு!

# சென்னை - பெங்களூரு இடையே பூமிக்கடியில் அதிவேக புல்லட் ரயில்!

## திட்ட அறிக்கை தயாரிக்க – தேசிய அதிவேக ரயில் கழகம் புதிய ஒப்பந்தம்!

*சென்னை, ஜூலை 18-*

சென்னை - பெங்களூரு புல்லட் ரயில் பூமிக்கடியில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை மற்றும் பெங்களூரு இடையே அதிவேக புல்லட் ரயில் இயக்குவதற்கான திட்டப் பணிகள் அடுத்த முக்கிய கட்டத்தை எட்டியுள்ளன. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை புதுப்பிக்கவும், புதிய பொறியியல் ஆய்வுகளை மேற்கொள்ளவும் தேசிய அதிவேக ரயில் கழகம் புதிய ஒப்பந்தம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

**பூமிக்கடியில் புல்லட் ரயில்**

ஏற்கெனவே 2024 செப்டம்பர் மாதத்தில் சென்னை பெங்களூரு மைசூரு வழித்தட புல்லட் ரயில் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதில், சென்னை பெங்களூரு இடையேயான பகுதிக்கு முதல் முன்னுரிமை அளிக்கப்பட்டு தற்போது பணிகள் துவங்கப்பட்டுள்ளன. புதிதாக கோரப்பட்டுள்ள இந்த ஒப்பந்தம் மூலம், அடுத்த 150 நாட்களுக்குள் நில அளவை, மண் பரிசோதனை மற்றும் வழித்தட மறுஆய்வுப் பணிகளை முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், புல்லட் ரயில் பாதை செல்லும் வழியில் உள்ள கூவம், பாலாறு போன்ற முக்கிய ஆறுகளைக் கடக்கும்போது எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இருக்க விரிவான வெள்ள அபாய மற்றும் நீரியல் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட உள்ளன. பெரம்பூர் லோகோ ஒர்க்ஸ் மற்றும் அய்.சி.எப் ரயில் பெட்டி தொழிற்சாலை பகுதிகளை கடக்கும் இடங்களில் மேம்பால ரயில் பாதைகளை வடிவமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக பொதுப்பணித்துறை, சென்னை குடிநீர் வாரியம் மற்றும் பிற உள்ளாட்சி அமைப்புகளிடம் இருந்து தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டு, புதிய நில அளவைப் படங்களும், தேவைப்பட்டால் புதிய நிலக் கையகப்படுத்துதல் திட்டங்களும் தயாரிக்கப்பட உள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது. பரந்தூரில் அமையவிருந்த புதிய பசுமைவழி விமான நிலைய திட்டத்தை கைவிட மாநில அரசு முடிவெடுத்துள்ளதாகக் கூறப்படும் நிலையிலும், சென்னை பெங்களூரு இடையேயான 306.2 கி.மீ நீள புல்லட் ரயில் பாதையில் பரந்தூர் ரயில் நிலையம் தொடர்ந்து தக்க வைக்கப்பட்டுள்ளது.

இந்த புல்லட் ரயில் பாதை சென்னை, பூவிருந்தவல்லி, பரந்தூர், சித்தூர், பங்காருபாலம், கோலார், மாலூர், ஒயிட்பீல்டு, பெங்களூரு ஆகிய ஊர்களை இணைக்கும் என கூறப்படுகிறது. குறிப்பாக சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு அருகில் பூமிக்கு அடியில் சுரங்கப் பாதையாக அமைக்கப்படும். இது சென்னை மெட்ரோ ரயிலுடன் இணைக்கப்பட்டு பயணிகள் எளிதாக மாற வழிவகை செய்யப்படும். அதே போல் பூந்தமல்லி (மேம்பாலம்) தேசிய நெடுஞ்சாலை 4இன் வடக்கு பகுதியில் மேம்பால நிலையமாக அமைக்கப்பட உள்ளது.

இது வெளிவட்ட சாலை, மெட்ரோ ரயில் 2ஆம் கட்டப் பணிகள், சென்னை விமான நிலையம் ஆகியவற்றுடன் இணைக்கப்படும். பரந்தூர் (மேம்பாலம்) முன்மொழியப்பட்ட விமான நிலைய பகுதியின் தெற்கு பக்கத்தில் மேம்பால நிலையமாக அமையும். இது சென்னை பெங்களூரு விரைவுச்சாலை மற்றும் என்.எச்48 உடன் இணைப்புச் சாலைகள் மூலம் இணைக்கப்படும், என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### தென்பெண்ணையாறு விவகாரம்

# கர்நாடகாவின் சீராய்வு மனு தள்ளுபடி!

## உச்சநீதிமன்றம் உத்தரவு!

*புதுடெல்லி, ஜூலை 18-*

தென்பெண்ணையாறு விவகாரத்தில் நடுவர் மன்றம் அமைப்பதற்கு எதிராக கர்நாடக அரசு தாக்கல் செய்த சீராய்வு மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

தென்பெண்ணையாறு நீர் பங்கீட்டு வழக்கு கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் உச்சநீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது. இந்த விவகாரத்தில் பலமுறை நடந்த பேச்சு வார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து, நடுவர் மன்றம் அமைப்பதே நிரந்தர தீர்வாக இருக்கும் என்று கடந்த திமுக ஆட்சியின் போது நீதிமன்றத்தில் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. அதனை ஏற்று நடுவர் மன்றம் அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

நடுவர்மன்ற விவரங்களை அரசாணையாக வெளியிட வேண்டும் என்று கடந்த பிப்ரவரி மாதம் வழங்கிய தீர்ப்பில் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த தீர்ப்பை எதிர்த்து கர்நாடகா அரசு சீராய்வு மனுவை தாக்கல் செய்தது. இதனை விசாரித்த உச்சநீதிமன்றம் கர்நாடக அரசின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

### ஸ்ரீ ஹரிகோட்டாவில் இருந்து -

# இந்தியாவின் முதல் தனியார் ராக்கெட்!

## இன்று விண்ணிற்குக் கிளம்புகிறது!

*திருப்பதி, ஜூலை 18-*

தெலுங்கானா மாநிலம் தலைநகர் ஐதராபாத்தைச் சேர்ந்த ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனம் விக்ரம்1 என்ற ராக்கெட்டை தயாரித்துள்ளது. இந்த ராக்கெட் ஆந்திர மாநிலம், ஸ்ரீ ஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் உள்ள முதலாவது ஏவு தளத்திலிருந்து இன்று காலை 11.30 மணிக்கு விண்ணில் ஏவப்படுகிறது.



விக்ரம்1 ஆனது கிரகா ஸ்பேஸ், காஸ்மோசர்வ், டிகியூப்ட் மற்றும் ஸ்கைரூட்டின் சொந்த ஸ்கோப் ஆகியவற்றிலிருந்து தொழில்நுட்ப விளக்க ஆய்வு கருவிகளை எடுத்துச் செல்கிறது.

அத்துடன், காஸ்மோஸ் டயமண்ட்ஸின் கலைப்படைப்பான 'காஸ்மிக் புளூம்' மற்றும் ஒரு மைக்ரோஆர்ட் பீஸ் கொண்டு செல்கிறது. விக்ரம்1 என்பது 7 அடுக்கு உயரமான, பல நிலை சுற்றுப்பாதை ஏவுகணை வாகனமாகும். இது அனைத்து கார்பன் கலவை அமைப்புடன் கட்டப்பட்டது மற்றும் 3டி அச்சிடப்பட்ட எந்திரங்கள் மற்றும் உயர் உந்துதல் திட எரிபொருள் ராக்கெட் பூஸ்டர்கள் உந்துவிசை அமைப்புகளால் இயக்கப்படுகிறது.

இதையடுத்து 350 கிலோ எடையுள்ள சிறிய செயற்கைக்கோள்களை குறைந்த புவி சுற்றுப்பாதைக்குக் கொண்டு செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் முதல் சோதனை விமானம் 60 டிகிரி சாய்வில் 450 கிமீ சுற்றுப்பாதையை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த வகை ராக்கெட் மூலம் சில நூறு கிலோ எடையுள்ள செயற்கைக்கோள்களை குறைந்த பூமியின் சுற்றுப் பாதையில் நிலைநிறுத்த வடிவமைக்கப்பட்ட ஒரு சிறிய வகை ராக்கெட்டாகும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.



சின்னாளப்பட்டியில் சுங்குடி சேலை உற்பத்தித் தொழிலைக் காப்பாற்ற சின்னாளப்பட்டி வட்டார சுங்குடி சேலை உற்பத்தியாளர்கள் மற்றும் நகர வர்த்தக நலச் சங்கத்தினர் தலைவர் தியாகராஜன் தலைமையில் முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கோரிக்கை மனு அளித்தனர். அருகில் ஒன்றியச் செயலாளர் முருகேசன் உள்ளார்.